பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

**காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(04.12.2024 முதல் 08.12.2024 வரை)**

**தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182**

**E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260**

---

**அறிக்கை எண்: 096 (12) PJN/GKMS/2024** **தேதி: 03.12.2024**

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (28.11.2024 முதல் 02.12.2024 வரை) | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -08.12.2024 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **29/11** | **30/11** | **01/12** | **02/12** | | நாள்-1 04/12 | நாள்-2 05/12 | நாள்-3 06/12 | நாள்-4 07/12 | நாள்-5 08/12 |
| 9.7 | 0.2 | 16.9 | 16 | மழை (மி.மீ) | 12 | 10 | 5 | 5 | 0 |
| 26 | 29 | 29 | 29 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 31 | 31 | 32 | 32 | 32 |
| 23 | 23 | 24 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 26 | 26 | 27 | 27 | 27 |
| 8 | 8 | 8 | 8 | மேக மூட்டம் | 8 | 8 | 6 | 6 | 6 |
| 52-90 | 76-91 | 99-87 | 91-92 | ஈரப்பதம் (%) | 90-91 | 90-91 | 84-86 | 84-86 | 84-86 |
| 12 | 17 | 13 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 12 | 10 | 5 | 5 | 0 |
| வட மெற்கு | மெற்கு | மெற்கு | தெற்கு | காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | வட மெற்கு | வட மெற்கு |

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| இடி மின்னலுடன் மழை பெய்யும் என்பதால், விவசாயிகள் தங்கள் விலங்குகளை கால்நடை கொட்டகைக்குள் வைத்திருந்து மின்னல் தாக்கங்களிலிருந்து உங்கள் விலங்குகளைப் பாதுகாக்கவும். தனியான மரத்தின் கீழ் அல்லது டிராக்டர், பண்ணை இயந்திரங்கள் மற்றும் இதர உலோகங்களால் செய்யப்பட்ட பண்ணை உபகரணங்களுக்கு அருகில் விலங்குகள் கூடுவதைத் தவிர்த்திடவும். | | |
| நெல் | களை மேலாண்மை | நெல்லில், களை மேலாண்மைக்கு ஹெக்டருக்கு பயிர் விதைத்து 10-12 நாட்களுக்குள் பின் பிஸ்பிரிபாக் சோடியம் (Bispyribac sodium) 200 கிராம் அல்லது பயிர் விதைத்து 12-15 நாட்களுக்குள் பின் சைஹலோஃபாப்-பியூட்டைல் (Cyhalofop-butyl) 350 கிராம் அல்லது பைரசோசல்ஃப்யூரான் ஈதைல் (Pyrazosulfuron ethyl) 200 கிராம் அல்லது பயிர் விதைத்து 30-50 நாட்களுக்குள் பின் 2,4-டி (2,4-D) 1.25 கிலோ என்ற அளவில் பயன்படுத்தி களைகளைக் கட்டுப்படுத்தலாம். |
| நெல் | குருத்துப் பூச்சி | நெற் பயிரில், குருத்துப் பூச்சிகளை கட்டுப்படுத்த, டிரைக்கோகிராமா ஜப்பானிக்கம் ஒட்டுண்ணிகளை ஹெக்டருக்கு 1,00,000 (நடவு நட்டபின் 37, 44 and 51 நாட்களில்) பயன்படுத்தலாம் அல்லது லிட்டருக்கு 4 மி.லி அசாடிராக்டின் (0.03 %) அல்லது கார்டேப்ஹைட்ரோகுளோரைடு (cartaphydrochloride 50% SP) லிட்டருக்கு 2 கிராம் அல்லது ஃப்ளுபெண்டையமைடு (flubendiamide 20 WG) லிட்டருக்கு 0.25 கிராம் அல்லது தையமீதாக்சம் (thiamethoxam 25 WG) லிட்டருக்கு 0.2 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம். |

| | | |
|---|---|---|
| | | |
| கால்நடை | | மழைக்காலங்களில் தீவனங்களின் மீது ஈரம் படாமல் பாதுகாத்து அபிளாடாக்ஸின் பாதிப்பை தவிர்க்கவும். |
| ஆடு | | மழைக்காலத்தில் ஆடுகளுக்கு வயரல் என்டரிடிஸ் எனப்படும் கழிச்சல் நோய் அதிகமாக பரவ வாய்ப்புள்ளது. கழிச்சல் ஏற்படும் பட்சத்தில் ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பாமல் உடனே கால்நடை மருத்துவரை அனுகவும். |
| கோழி | | ஆழ்கூள முறையில் கோழி வளர்ப்பவர்கள் அதிக ஈரம் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் 100 சதுர அடிக்கு 5 கிலோ சுண்ணாம்புத் தூளை இட்டு நன்றாகக் கிளறி விட வேண்டும். தேவைப்பட்டால் புது ஆழ்கூளம் ஏற்படுத்த வேண்டும். |

**முதல்வர்**